### இந்தியா வந்துள்ள இலங்கை பிரதமரிடம் – கச்சத் தீவை மீட்கவும் –

# சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் - படகுகள் உடனே விடுவிக்கவும் வலியுறுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் கோரிக்கை!

சென்னை, அக். 18–

**இலங்கையிடமிருந்து கச்சத் தீவை மீட்கவும், இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் புதுப்பிக்கவும். இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ள இலங்கை பிரதமர் அவர்களை வலியுறுத்திட வேண்டி இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டு இருப்பதாவது:-

இலங்கையிடமிருந்து கச்சத் தீவை மீட்கவும், இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் புதுப்பிக்கவும், இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ள இலங்கை பிரதமர் அவர்களை வலியுறுத்திட இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கை பிரதமர் அவர்களின் மூன்று நாள் புதுதில்லிப் பயணம் அக்டோபர் 16-18, 2025 அன்று திட்டமிடப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பயணம், பாக் விரிகுடாவின் பாரம்பரிய மீன்பிடி கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் ஒரு தொடர்ச்சியான பிரச்சனைகளை தீர்க்க ஒரு சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து நடைபெறும் தாக்குதல்கள், துன்புறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக தமிழக மீனவ சமூகங்கள் தொடர்ந்து துன்பங்களை எதிர்கொள்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2021 முதல், 106 வெவ்வேறு சம்பவங்களில் 1,482 மீனவர்களும் 198 மீன்பிடிப் படகுகளும் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மீனவர்கள் பெரும் துயரத்தையும் பொருளாதார இழப்பையும் எதிர்கொண்டுள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளைத் தூதரக நடவடிக்கைகள் மூலம் தீர்க்க இந்திய அரசின் தலையீட்டை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரி வருவதாகவும், இதற்காக, தான் பதினொரு முறை பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளதையும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு 72 முறை கடிதம் எழுதியுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சிறைப்பிடிப்பு மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இந்த கீழ்க்கண்ட முக்கியமான பிரச்சினைகள் குறித்து இலங்கைப் பிரதமரின் வருகையின் போது விவாதிக்கப்பட வேண்டும் என்று தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கச்சத்தீவு மீட்பு:**

தமிழ்நாட்டு மீனவர்கள் பாரம்பரியமாக இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் மீன்பிடித்து வருகின்றனர். இந்தத் தீவு ஒன்றிய அரசால் மாநில அரசின் முறையான ஒப்புதலைப் பெறாமல் இலங்கைக்கு மாற்றப்பட்டதை இந்த முடிவை 1974 முதல் தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இதன் விளைவாக, நமது மீனவர்கள் இப்போது தங்கள் பாரம்பரிய மீன்பிடித் தளங்களுக்குள் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அத்துமீறி நுழைவதாகக் கூறி அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், கச்சத்தீவை மீட்பதற்கும், பாக் விரிகுடா பகுதியில் உள்ள நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பதற்கும், இந்தியாவிற்கு வருகை தரும் இலங்கை பிரதமர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், மீனவ சமூகம் எதிர்கொள்ளும் நீண்டகால மற்றும் துயரமான பிரச்சினைகளைத் தீர்க்க இது மிகவும் முக்கியமானது மாகும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த 76 மீனவர்களும் 242 மீன்பிடி படகுகளும் இலங்கை வசம் உள்ள நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எதிர்கொள்ளும் துயரத்தைத் தணிக்க, அவர்களை விரைவாகத் தாயகம் திரும்பவும், அவர்களின் படகுகளை இலங்கை அரசிடமிருந்து விடுவிக்கவும் உரிய அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கடலில் வன்முறை மற்றும் திருட்டு சம்பவங்களை தடுத்தல்:**

இந்திய மீனவர்கள் தங்கள் மீன்பிடி உபகரணங்கள் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்படுவதையும், இலங்கை நாட்டினரால் அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் குறித்தும் புகார் அளிப்பதாகவும், இந்தப் பிரச்சினையை திறம்பட தீர்க்க மேம்படுத்தப்பட்ட இருதரப்பு பாதுகாப்பு ஒருங்கிணைப்பு மற்றும் நிலையான தூதரக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீன்பிடிச் சட்டத்தில் 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தம், பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீன்பிடி படகுகளை தேசியமயமாக்க வழிவகுத்துள்ளதால் அவற்றை மீட்டெடுப்பதை சாத்தியமற்றதாக்கிவிட்டது. இது பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடுமையான நிதி நெருக்கடியையும் வாழ்வாதார இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் நிரந்தரமாக பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய இந்தப் பிரச்சினையை இலங்கை பிரதமரிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழுவிற்கு புத்துயிர் அளித்தல்:**

மேற்குறிப்பிட்டுள்ள இருதரப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிறுவப்பட்ட மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழு, சமீபத்திய ஆண்டுகளில் தொடர்ந்து கூட்டப்படுவதில்லை. எனவே, இரு நாடுகளைச் சேர்ந்த மீனவர்களின் கவலைகளை, நிலையான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் நிவர்த்தி செய்வதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட தளத்தை உருவாக்க இந்த வழிமுறையை மீண்டும் புதுப்பிப்பது அவசியமாகும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளினால் ஏற்படும் மனித மற்றும் பொருளாதார பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, தொடர்ச்சியான தூதரக நடவடிக்கைகள் மூலம் விரைவான மற்றும் நீடித்த தீர்வை அடையும் நோக்கில், இவற்றை இலங்கை பிரதமர் அவர்களிடம் எடுத்துச் சென்று விவாதிக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### திருநெல்வேலி மாவட்டம் – இராதாபுரத்தில்

# ரூ. 18.10 கோடி மதிப்பில் பல்நோக்கு விளையாட்டரங்கம் - ரூ. 3.33 கோடி மதிப்பில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

திருநெல்வேலி, அக். 18–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில், அகில இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல். உயரிய ஊக்கத்தொகை வழங்குதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

மேலும் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட விளையாட்டு மைதானங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், நவீன உடற்பயிற்சி கூடங்கள், சட்டமன்ற தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள், பல்நோக்கு விளையாட்டரங்கம், விளையாட்டு விடுதி கட்டடங்கள் என பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் நடந்த அரசு விழாவில், திருநெல்வேலி மாவட்ட கடலோரப் பகுதிகளில் விளையாட்டு வீரர்கள் அதிக எண்ணிக்கையிலும், ஆர்வத்துடனும் உள்ளனர். அவர்களை ஊக்குவிப்பதற்காகவும், தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க வைப்பதற்காகவும், திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.

இதனடிப்படையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (16.10.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், விஜயபாதி கிராமத்தில் 14.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு பயிற்சி கூடம், உள்ளரங்க கையுந்துபந்து மைதானம், உள்ளரங்க இறகுப்பந்து மைதானம், உடற்பயிற்சி கூடம், தடகள பாதை, நீளம் தாண்டுதல், கால்பந்து மைதானம், கூடைபந்து, கபாடி, கோகோ, மற்றும் கைப்பந்து ஆடுகளங்கள், கேலரி வசதி, உடை மாற்றும் அறை மற்றும் சுற்று சுவர் ஆகிய வசதிகளுடன் பயிற்சி மையத்துடன் கூடிய பல்நோக்கு விளையாட்டரங்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், 3.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கத்தில் கூடுதல் பணிகளாக இறகுப்பந்து செயற்கை ஆடுகளம், குடிநீர் வசதி, ஒளிரும் மின்விளக்குகள் வசதி, உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

நேற்று முன்தினம் மொத்தம் 18.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ். இரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு...

முதல் பக்கத் தொடர்ச்சி

சமீபத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டில், திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தீர்மானமாக நிறைவேற்றி என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஆணவப் படுகொலைகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, சமுதாய மாற்றத்தையும் ஏற்படுத்தி, அதன் மூலம் இந்த அநீதியைத் தடுக்க வேண்டும் என்பது நம் அனைவரது ஆதங்கமாக இருக்கிறது.

ஆணவப் படுகொலை நடைபெறும் போது, அது தொடர்பான வழக்குகள் அனைத்திலும் கடுமையான பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இப்படுகொலைகளுக்குச் சாதி மட்டுமே காரணமல்ல, இன்னும் பல காரணங்களும் இருக்கின்றன. எதன்பொருட்டு நடந்தாலும், கொலை கொலை தான். அதற்கான தண்டனைகள் மிக, மிகக் கடுமையாகவே தரப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் உடனடியாக குண்டர் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

யாரும் – எவரும் எதன்பொருட்டும், செய்த குற்றத்தில் இருந்து தண்டனை இல்லாமல் தப்பிவிடக் கூடாது என்பதை காவல் துறைக்கு உத்தரவாகப் போட்டுள்ளோம். எனவே, சட்டம் அதன் கடமையைச் செய்கிறது.

**விழிப்புணர்வு பரப்புரை!**

அதே நேரத்தில், இக்கொடூரமான சிந்தனைக்கு எதிரான விழிப்புணர்வு பரப்புரையை சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் மட்டுமல்ல; அரசியல் இயக்கங்களும், பொதுநல அமைப்புகளும் செய்ய வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். நாகரிக சமுதாயத்தின் அடையாளம் என்பது பொருளாதார மேம்பாடு மட்டுமல்ல, சமூகச் சிந்தனையில் மேம்பாடு என்பதை உணர்த்துவதாக இப்பரப்புரைகள் இருக்க வேண்டும். சமுதாயத்தில் சாதி வேற்றுமைக்கு எதிராக, ஆதிக்க மனப்பான்மைக்கு எதிராக அனைவரும் பேச வேண்டும். மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் ஏதுமில்லை; அனைவரும் சமம்; பாலின சமத்துவமும், வளர்ச்சி பெற்ற ஒரு சமுதாயத்திற்கு ஒரு அடையாளம் என்றார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள்.

**சுயமரியாதை – அன்பு சூழ்ந்த மானுடத்தை உருவாக்க பரப்புரை!**

அனைத்துவிதமான ஆதிக்க மனப்பான்மைக்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். ஆதிக்க எதிர்ப்பும் சமத்துவ சிந்தனையும் கொண்ட சுயமரியாதையும் அன்பும் சூழ்ந்த மானுடத்தை உருவாக்குவதற்கான பரப்புரையை ஓர் இயக்கமாக முன்னெடுத்து செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமை! (மேசையைத் தட்டும் ஒலி) சீர்திருத்தப் பரப்புரையும் குற்றத்திற்கான தண்டனையும், வாளும் கேடயமுமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

**தேவையான பரிந்துரைகளை அளிக்க ஆணையம்!**

இது குறித்து தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா அவர்கள் தலைமையில் சட்ட வல்லுநர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், மானுடவியல் அறிஞர்களைக் கொண்ட ஒரு ஆணையம் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை என்னுடைய முக்கியமான அறிவிப்பாக இம்மாமன்றத்தில் அறிவிக்கிறேன்.

இந்த ஆணையம் அரசியல் இயக்கங்கள், சட்ட வல்லுநர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும் பெற்று, இப்பொருள் குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கும். அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதி அளித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# உதவிப் பேராசிரியர்கள் பணிக்குத் தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

## உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, அக்.18

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,708 உதவி பேராசிரியர்கள் நிரந்தரமாக நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நேற்று முன்தினம் (16.10.2025) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க



அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 2,708 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பிட ஆணைகள் வெளியிடப்பட்டன. இது தொடர்பாக 07.10.2025 ஆம் நாளிட்ட அறிக்கையில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, நேற்று முன்தினம் (16.10.2025) ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அதில் பாடவாரியான காலிப் பணியிட விவரங்கள், கல்வித் தகுதி, வயது மற்றும் விண்ணப்பம் செய்வதற்கான அனைத்து விவரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. பணிநாடுநர்கள் ஏற்கனவே முந்தைய அறிவிப்பின் கீழ் விண்ணப்பித்திருந்தாலும் மீண்டும் தற்போதும் விண்ணப்பிக்க வேண்டும். இவர்கள் ஏற்கனவே தேர்வு கட்டணம் செலுத்தியுள்ளதால் தற்போது மீண்டும் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை 17.10.2025 முதல் 10.11.2025 வரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். 20.12.2025 அன்று தேர்வு நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், கணிதம், கணினி அறிவியல் மற்றும் பொருளியல் உள்ளிட்ட 61 பாடப்பிரிவுகளுக்கும் பாடவாரியாக தமிழ்நாடு இடஒதுக்கீட்டின் கீழ் காலிப்பணியிட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சென்னை, மாநிலக் கல்லூரியில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கற்பிக்க ஏதுவாக தமிழ் மற்றும் கணினி அறிவியல் பிரிவிற்கு 3 பணியிடங்கள் சிறப்பினமாக தேர்வு செய்யப்படவுள்ளது.

இந்த அறிய வாய்ப்பினை பணிநாடுநர்கள் பயன்படுத்திக்கொண்டு 10.11.2025க்குள் தங்களது விண்ணப்பத்தினை HTTPS://WWW.TRB.TN.GOV.IN என்ற இணையதளத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

---

### விஜயகுமார் தலைமை!

# செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## ஆரணி எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

*செஞ்சி, அக். 18 -*

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார்.வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்தியஆரணி எம்.பி. எம்.எஸ். தரணிவேந்தன் தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்துத் துறை சார்பில்பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து எம். எஸ். தரணி வேதன் எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பழமரக்கன்று விதைகளையும், மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும்,ரத்த அழுத்தம், நீரழிவு நோய், சர்க்கரை,நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து மாத்திரை பெட்டகத்தினையும் ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன் வழங்கினார்.

முகாமில் சிங்கவரம், பொன்பத்தி, ஊரணி தாங்கள்,நரசிங்க ராயன் பேட்டை ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், மாவட்ட கவுண்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன்,ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல், கமலாம்மாள், ஊராட்சி மன்ற தலைவர்கள் பராசக்தி, அனுசுயா, சாரதா, பிலால்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரபாண்டியன், காஞ்சனா, சசிகலா,அபிராமி, நிர்வாகிகள் அய்யாதுரை, வாசு,செல்வமணி, சிவப்பிரகாசம், பாலகிருஷ்ணன், தொண்டரணி பாஷா, ராமு, செந்தில், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

---

### விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை

# சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மாற்றுக!

## சட்டப் பேரவையில் அன்னியூர் சிவா கோரிக்கை!

*சென்னை, அக். 18 -*

சட்டப்பேரவையில் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா கோரிக்கைக்கு நடவடிக்கை எடுப்பதாக சுகாதா ரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முண்டியம்பாக்கத்தில் உள்ள விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகின்றனர்.



அவசர சிகிச்சை பிரிவை மேம்படுத்த வேண்டும், மழைக்காலங்களில் மருத்துவமனை மற்றும் டீன் குடியிருப்பில் தண்ணீர் தேங்குகிறது .

அதற்கு நடவடிக்கை தேவை என்றும் மேலும் இம்மருத்துவமனையை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்றும் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா சட்டப் பேரவையில் கோரிக்கை வைத்தார்.

அதற்கு பதில் அளித்து பேசிய தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன மருத்துவமனை மற்றும் டீன் குடியிருப்பு பகுதியில் தண்ணீர் தேங்காத அளவிற்கு மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என பதிலளித்தார்.